பவானி நகராட்சி 01.12.2025–ம் தேதி திங்கட்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

**பொருள்எண்: 1**

இந்நகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு காலை உணவு வழங்க ரூ.88.00 இலட்சம் மதிப்பீட்டில் 150 பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் காணொலி காட்சி அறிவுரை நாள். 03.11.2025–ல் அறிவுறுத்தப்பட்டு, இப்பணிக்கு 25.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s. Peoples Kitchen, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன் அடிப்படையில் அவர்களின் விலை விகித பட்டியல் 26.11.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு விலை ரூ. இலட்சத்தில் | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. Peoples Kitchen, Coimbatore | 88.00 | ஒரு வேலை காலை உணவிற்கு ரூ.47.75 |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் ஒரு வேலை காலை உணவிற்கு ரூ.47.75க்கு உணவு வழங்க M/s.Peoples Kitchen, Coimbatore அவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29143/2025/எச்3 நாள். 23.11.2025ல் இரண்டாம் நிலை நகராட்சிகளுக்கு ஒரு வேலை காலை உணவிற்கு ரூ.44.23 என விலை நிர்ணயம் செய்து கடிதம் வரப்பெற்று உள்ளது.

அதன்படி ஒப்பந்ததாரர் M/s.Peoples Kitchen அவர்களை ரூ.47.75 என குறிப்பிட்டு உள்ளதை குறைத்து, விலைகுறைப்பு செய்ய கோரி 27.11.2025 அன்று கடிதம் கொடுக்கப்பட்டது. அதனை ஏற்று 27.11.2025 அன்றைய தினம் ஒரு வேலை காலை உணவிற்கு ரூ.44.20க்கு செய்து கொடுக்க சம்மதம் கடிதம் அளித்துள்ளார்கள். எனவே ஒப்பந்ததாரர் M/s. Peoples Kitchen அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ஒ/ம்.)இ.சிந்தூரி
தலைவர்
பவானி நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
பவானி நகராட்சி.